2226715 - mis km "9/6/..."
0778013766 - Jaffna The University of Jaffna

# ஊற்று நிறுவனம்
## OOTRU ORGANISATION
## ALVAI EAST, ALVAI, KARAVEDDY

# தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
# VOCATIONAL TRAINING PROGRAMME

TVEC REGISTERED VOCATIONAL TRAINING CENTRE
TVEC REG . NO : P25/0017

# திட்ட அமுலாக்கல் அறிக்கை
# Project Implementation Report

## 2006 - 2010

அறிஞர் தம் இதயஓடை ஆழநீர்
தன்னை மொண்டு செறிதரு மக்கள்
எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றிப்
புதியதோர் உலகம் செய்வோம்.

தொழிற்பயிற்சியினூடே வாழ்வில் முன்னேறுவோம் .........

# ஊற்று நிறுவனம்
# தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

## உள்ளடக்கம்


01) பின்புலம்

02) தொழிற்பயிற்சியின் அவசியம்

03) நோக்கம்

04) செயற்திட்ட அமுலாக்கம்

05) துறைரீதியான பயிற்சிகளும், அவற்றின் முக்கியத்துவமும்

| | | |
|---|---|---|
| i) | மரவேலை | 4 பயிற்சிகள் |
| ii) | வீட்டு மின்இணைப்பு | 2 பயிற்சிகள் |
| iii) | கணனி வன்பொருள் திருத்துதல் | 4 பயிற்சிகள் |
| iv) | மேசன் | 1 பயிற்சி |
| v) | அலுமினியம் பொருத்துதல் | 1 பயிற்சி |
| vi) | ரிவி, றேடியோ திருத்துதல் | 1 பயிற்சி |
| vii) | வீட்டு மின் உபகரணங்கள் திருத்துதல் | 1 பயிற்சி |
| viii) | ரிங்கறிங் பெயின்ரிங் | 1 பயிற்சி |

06) தொழிற்பயிற்சி பற்றிய விழிப்புணர்வூட்டலும் அணி திரட்டலும்.

07) தொழிற்பயிற்சி துறையில் இனங்காணப்பட்ட பொதுப் பிரச்சனைகள்

08) மெல்லக் கற்போருக்கான பரிகாரம்.

09) தொழிற்பயிற்சியில் நிறுவனத்தின் சாதனைகள்.

10) வெளிக்களப்பயிற்சி.

11) பயிற்சி முடித்த பயிலுநர்களின் தொழில் வாய்ப்பு.

12) Pre Courses - முக்கியத்துவங்கள்

13) மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதிவும் (TVEC Registration), பயிற்சிநெறி தரமுயர்த்தலும் ( Course Accreditation )

14) பின்னிணைப்பு :-

i) தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி (CBT),
தேசிய தொழிற்தகைமை (NVQ)

ii) கற்றலுக்கும் வள பயன்பாட்டுக்குமான நிலையம்
Learning Resource Utilization Centre ( LRUC )

iii) சாதாரண பயிற்சிக்கும் தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சிக்கும் (CBT) இடையிலான வேறுபாடு.

# 01. பின்புலம்

## ஊற்று நிறுவன வரலாறு

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற மாணவர் குழு நவீன விஞ்ஞான அறிவை தமிழ் மக்களிடையே பரப்ப வேண்டும் என்ற நோக்குடன் கல்வி வளர்ச்சிக்கான மையம் ஒன்றை உருவாக்கி 1972ல் ஊற்று· என்ற சஞ்சிகையை பிரசுரித்தது. இச்சஞ்சிகை தொடர்ச்சியாக 15 ஆண்டுகள் வெளிவந்தது.

நிறுவனத்தின் வளர்ச்சியில் 1981ம் ஆண்டு அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்து அமுல்செய்யும் ஒரு இலாபநோக்கமற்ற கம்பனியாக கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டது. அத்துடன் 30 அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டதோடு பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்களையும், குறிப்பிட்ட ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சி பெற்றவர்களையும் உள்ளடக்கியதாக இதன் ஆளணி வலிமை பெற்றது.

2000ம் ஆண்டு உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமாக சமூக சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. மக்களுக்கு சேவை செய்யும் ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகக் கணிக்கப்பட்டு வெளிநாட்டு நிதிஉதவி தாபனங்களினதும், கொடையாளர்களினதும், நிதியைப் பெற்று திட்டங்களை அமுல்செய்து வருகின்றது இதன் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

## திட்டகரு உருவாக்கம்

நிறுவனம் அமுல்செய்து வரும் திட்டங்களில் 2003ம் ஆண்டு கணவனை இழந்த குடும்பங்களில் வருமானம் உருவாக்கும் திட்டத்தினை அமுல்செய்தபோது இக்குடும்பங்களில் உள்ள வயது வந்த இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புப் பெற்று உழைக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது, இதன் அடிப்படையில் இக்குடும்பங்களைச் சேர்ந்த 10 யுவதிகள் முதற் கட்டமாக பருத்தித் துறை கோரியடியிலுள்ள ஜஸ்மின் கண்ணாடி இழைப்படகு தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பயிற்சியுடனான வேலைக்கு அனுப்பப்பட்டனர்.

மேலும் நிறுவனம் அமுல்செய்து வந்த கிராமிய தற்சார்பு வளர்ச்சித் திட்ட பிரதேசமாகிய இயக்கச்சி கொத்தணியில் பெண் பிள்ளைகள் கிளிரெக்-வூஸ்க் நிறுவன அனுசரணையில் மரவேலைப் பயிற்சி பெறுகின்றமை அவதானிக்கப்பட்து. இதன் பின் யாழ்ப்பாணத் திலும் படித்து விட்டு தொழிலற்று இருக்கும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் இவ்வாறு தொழில் பயிற்சி பெறுவதன் ஊடாக தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியுமென நிறுவனம் உணர்ந்தது.

இதன் விளைவாக தெரிவு செய்யப்பட்ட சில கிராமங்களில் வேலையற்று இருக்கும் இளைஞர் யுவதிகளுடன் தொழில் பயிற்சி யின் அவசியம் பற்றிய கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டது. இதன் அடிப்படையில் குறிப்பிட்டளவு இளைஞர் யுவதிகள் தொழில் பயிற்சியைப் பெறுவதற்குத் தயாராக இருந்தபோதும் திட்டத்தை அமுல் செய்ய நிதிவளம் பிரச்சனையாக இருந்தது.

2006ம் ஆண்டு கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனம் (WUSC) யாழ்ப்பாணத்தில் பயிற்சித் திட்டங்களை அமுல்செய்ய முன்வந்தபோது எமது நிறுவனத்தால் முன்மொழிவுகள் வழங்கப்பட்டு திட்ட அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றது. இதனடிப்படை யில் 2006ம் ஆண்டிலிருந்து 2010ம் ஆண்டு வரை (WUSC) நிறு வனத்தின் அனுசரணையுடன் பயிற்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. தொடர்ந்தும் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அரச அனுமதி மறுக்கப்பட்டமை எமக்கு இளைக்கப்பட்ட ஓர் அநீதியாகும்.

# 02. தொழில் பயிற்சியின் அவசியம்

## I) இலங்கையில் கல்வி முறையில் உள்ள குறைபாடு

கல்வி கற்பதன் பிரதான நோக்கம் அறிவையும் திறனையும் விருத்தி செய்வதனூடாக தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதே ஆகும். ஆனால் நடைமுறையிலுள்ள கல்வி முறையினால் வேலை யில்லாப் பிரச்சனையே உருவாகின்றது. அதாவது வேலை வாய்ப்பு இன்மைக்கு செல்லுகின்ற பாலமாக இக் கல்விமுறை அமைகின்றது. இதிலிருந்து விடுபட வேண்டுமெனில் தொழில் கல்வியினைப் பயின்று தொழில் வல்லாளராக மாறி தொழில் செய்யவேண்டும். தற்போதைய கல்வி முறையில் பாடசாலைக் கல்விக்கு உள்நுழையும் மொத்த பிள்ளைகளில்.

40% ஆனோர் இரண்டாம் நிலை செல்வதில்லை.
60% ஆனோர் க.பொ.த.சா/தரத்தில் வெளிச்செல்கின்றனர்.
80% ஆனோர் உயர்தரத்தில் வெளிச்செல்கின்றனர்.

## வடமராட்சி கல்வி வலய நிலமைப் பகுப்பாய்வு

யாழ்மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களில் வடமராட்சி வலயமும் ஒன்றாகும். வேறுபட்ட தரத்திலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை கீழே தரப்படுகிறது.

| தரம் | எண்ணிக்கை | இடைவிலகல் | மொத்தம் | வீதம் |
|---|---|---|---|---|
| தரம் 1 | 2000 | - | | |
| தரம் 11 - க.பொ.த சா.தரம் | 1600 | 400 | | |
| க.பொ.த சா.த.சித்தியடைந்தோர் | 700 | 900 | 1300 | 65% |
| க.பொ.த உ.த.ற்கு தகுதியானோர் | 300 | 400 | | |
| க.பொ.த உ.த.சித்தியடைந்தோர் | 150 | 150 | | |
| பல்கலைக்கழக அனுமதி | 80 | 70 | | |

க.பொ.த.சா.தரத்தின் பின் கல்வியின் பிரதான நீரோட்டத்தில் இருந்து மொத்தம் 2000 மாணவர்களில் 1300 மாணவர்கள் விடுபடு கின்றார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

அவர்கள் ஜீவனோபாயத்திற்காக தமது குலத்தொழிலாகிய விவசாயம், மீன்பிடி,சிறுகைத்தொழில், வியாபாரம் முதலியவற்றில் அல்லது புதிய தொழில் வகைகளைத் தெரிந்தெடுப்பதற்கு உகந்த தொழில் பயிற்சி திட்டத்தில் இணையவேண்டும். ஆகவே அவர்களுக்கு நன்கு வகுக்கப்பட்ட தொழில் பயிற்சி திட்டத்தை அமுல் செய்வது அத்தியாவசியமாகின்றது.


## II) வேலையற்றிருப்போர் எண்ணிக்கை

யாழ் மாவட்டத்தில் வேலையற்றிருப்போரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதோடு வருடாவருடம் பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகி எண்ணிக்கையை அதிகரித்த வண்ணமுள்ளது. மிகக் குறைந்த வீத அளவினருக்கே அரச உத்தியோகமும் தனியார் துறையில் தொழில் வாய்ப்பும் கிடைக்கின்றது.

### வேலையற்றோர் ஆய்வு - 2002

2002ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட வேலை அற்றோர் ஆய்வில் பெறப்பட்ட பெறுபேறுகள் வருமாறு.

| | |
|---|---|
| மாவட்ட சனத்தொகை | 538660 |
| உழைக்கும் பிரிவினர் | 299884 |
| வேலை செய்வோர் | 106831 |
| வேலையற்றோர் | 82992 |
| கீழ் உழைப்பு நிலையிலுள்ளோர் | 110061 |



### III) தரமான தொழிலாளர்களை உருவாக்கல்

தொழில் துறைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் முறையாகப் பயிற்சி பெறாமல் பணியாற்றுவதால் அவர்கள் செய்யும் தொழிலின் தரம் கேள்விக் குறியாக உள்ளது. அத்தோடு அவர்களின் வெளியீடும் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் நடைபெறும் அபிவிருத்தி, நிர்மாண, புனரமைப்பு வேலைத்திட்டங்களின் ஆயுட் காலம் மிகக் குறுகியதாகக் காணப்படுகின்ற அபாயநிலை உள்ளது. இதனால் உருவாக்கப்படும் தொழிலாளர்கள் முறையான தொழிற் பயிற்சியைப் பெற்று தொழிலாளர்களாவதன் மூலம் தொழில் தரம் உயரும். இந்த வகையில் தொழில் பயிற்சி அவசியமானதாகும்.

### IV) அருகி செல்லும் தொழில் துறையை விருத்தி செய்தல்

சமூகத்திற்குத் தேவையான , தொழிலாளர் ரீதியில் அருகிச் செல்கின்ற தொழில்துறைகளை விருத்தி செய்ய வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

உ+ம் : ரிங்கரிங் பெயின்ரிங், இலத்திரனியல் உபகரணங்கள் திருத்தம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### V) சமூக அபிவிருத்திக்கு தேவைப்படும் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தல்


சமூக அபிவிருத்திக்குத் தேவையான தொழில்நுட்பங்களைப் புகுத்துவதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ செல்வாக்குச் செலுத்துகின்ற புதிய தொழில்துறைகளை அறிமுகப்படுத்தி விருத்தி செய்வதற்கும் தொழிற்பயிற்சியானது அவசியமாகின்றது.

உ+ம் : கணனி வன்பொருள் திருத்துதல், நவீன இயந்திரங்களை இயக்குதலும், திருத்துதலும் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## 03. நோக்கம்

சமூக பொருளாதார அபிவிருத்திக்கு தேவைப்படும் ஐந்து மூலதனங்களுள் முக்கியமான மனித மூலதனத்தை பெருக்குவதற்கு வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கி உழைக்கும் திறனை அதிகரிப்பதன்மூலம் வருமானத்தை பெருக்கி வறிய குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு வாய்ப்பு அளித்தலாகும்.

**அபிவிருத்திக்கு தேவையான ஐந்து மூலதனங்கள்**




| | | |
|---|---|---|
| Human Capital (H.C) | - | மனித மூலதனம் |
| Social Capital (S.C) | - | சமூக மூலதனம் |
| Financial Capital (F.C) | - | நிதி மூலதனம் |
| Physical Capital (Phy.C) | - | பௌதீக மூலதனம் |
| Natural Capital (N.C) | - | இயற்கை மூலதனம் |
| Economic Development | - | பொருளாதார அபிவிருத்தி |
| Social Development | - | சமூக அபிவிருத்தி |

# 04. செயற்திட்ட அமுலாக்கம்

**I) பயிற்சி நெறித் தெரிவு**

பிரதேசத்தின் தேவைப்பாட்டையும், பயிலுநர்களின் நாட்டத்தையும் கருத்தில் கொண்டே பயிற்சிநெறிகள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது.

**II) பாடவிதானம்**

தேசிய தகைமைத் திறன்களை (NCS) அடைவதற்கான அங்கீகரிக்கப்பட்ட CBT பாடவிதானம் போதிக்கப்படும்.

**III) பயிற்சிக் காலம்**

வகுப்பறைப் பயிற்சி 7 மாதங்களும் வெளிக்களப் பயிற்சி 3 மாதங்களும் நடைபெறும். வாரத்தில் 5 கிழமை நாட்கள் காலை 8.30 மணிமுதல் மாலை 2.30 மணிவரை பயிற்சி நடைபெறும்.

**IV) வேலைத்திட்டம்**

நாளாந்த அடிப்படையில் மொடியூல்களை(துண்டங்கள்) மையமாகக் கொண்டு மாதாந்த வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு நேர சூசிக்கு அமைவாக போதனைகள் இடம்பெறும்.

**V) செயற்திட்ட நிதி**

கனேடிய உலக பல்கலைக்கழக சேவை (WUSC) 2006ம் ஆண்டு இத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்க முன்வந்தது. தொடர்ந்து 2007, 2008, 2010 காலப்பகுதிகளில் நிதி வழங்கியது. 2009ம் ஆண்டு திட்டத்திற்கு முழுநிதியும், 2010ம் ஆண்டு திட்டத்திற்குரிய பகுதிநிதியும் ஊற்று நிறுவன நிதியில் இருந்து வழங்கப்பட்டது.

**VI) போதனாசிரியர் தெரிவு**

விளம்பரப்படுத்தல் மூலம் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில் குறும்பட்டியல் இடப்பட்டு நேர்முகத்தேர்வின் மூலம் தகுதி

யானவர்கள் தெரிவு செய்யப்படுவர். நிறுவனத்தால் நடாத்தி முடிக்கப்பட்ட பயிற்சிநெறிகளில் பயின்ற திறமையான, கற்பித்த லுக்குப் பொருத்தமான பயிற்சிபெற்ற பயிலுநர்கள் போதனா சிரியர்களாக இணைத்துக் கொள்ளப்படுவார்கள். 25 பயிலுநர்களைக் கொண்ட பயிற்சிநெறிக்கு பிரதான போதனாசிரியர், உதவிப் போதனாசிரியர் என இருவர் உள் வாங்கப்படுவர். 15 பயிலுநர்களைக் கொண்ட பயிற்சிநெறிக்கு பிரதான போதனாசிரியர் ஒருவரே உள்வாங்கப்படுவார்.

## VII) பயிலுநர் தெரிவு

பத்திரிகைமூலம் விளம்பரப்படுத்தப்பட்டு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், நிறுவனத்தில் பயிற்சிக்காக பதியப்பட்ட விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டு குறும்பட்டியலிடப்பட்டு நிரற்படுத்தப்படும். பின் நேர்முகத்தேர்வின்மூலம் பொருத்தமான பயிலுநர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

## VIII) கருவிகள், உபகரணங்கள்

ஒவ்வொரு பயிற்சிநெறியிலும் பயிற்சிநெறியிலுள்ள பயிலுநர் களின் எண்ணிக்கைக்கு ஏற்ற வகையில் NCS இல் நிர்ண யிக்கப்பட்ட அனைத்து கருவி உபகரணங்களும் பயிலுநர் களின் பயன்பாட்டுக்கு வழங்கப்படும்.

## VIII) அழிபொருட்கள்

ஒவ்வொரு பயிற்சிநெறிக்கும் அப்பயிற்சி மொடியூல்களுக்கு தேவையான அழிபொருட்கள் வழங்கப்படும்.

## IX) பதிவேடுகள்

பயிற்சிநெறியில் வரவுப் பதிவேடு, உபகரணப் பதிவேடு, அழிபொருட்பதிவேடு, பாடப்பதிவேடு, பயிலுநர் முன்னேற்றப் பதிவேடு, பயிலுநர்கோவை போன்றன பேணப்படும்.

## X) சீருடை

பயிற்சிநெறிக்கு ஏற்ற வகையான (Soft Course / Hard Course) சீருடை வழங்கப்படும்.

## XI) பாதுகாப்பு

பயிற்சிநெறியில் பாதுகாப்பு மிக முக்கியமானது. தொழிற் சாலை பாதுகாப்பு விதிமுறைகள் கடைப்படிக்கப்படும். பாது காப்பு உபகரணங்கள் பயன்படுத்தப்படும். அத்தோடு பயிலுநர் களுக்கு பாதுகாப்பு தொடர்பான 2நாள் பயிற்சி நடாத்தப்படும்.

## XII) PRE COURSE

தொழில் வாழ்க்கைக்கு தேவையான மேலதிக பயிற்சிகளாக பின்வரும் பயிற்சிகள் நடாத்தப்படும். வாழ்க்கைத்திறன், பால் நிலை அபிவிருத்தி, முதலுதவி, பாதுகாப்பு, கைத்தொழில் பற்றிய அறிவு, தொழில்முனைவு, HIV எயிட்ஸ். போசாக்கும் உடல்நலமும் போன்ற பயிற்சிகள் Pre, Mid, Post என பயிற்சியின் ஆரம்ப, இடைநிலை, முடிவுக் காலங்களில் பிரத்தியேக வளவாளர்களால் நடாத்தப்படும்.

## XIII) ENGLISH

நாளாந்தம் பயிற்சி நேரத்தில் 1 மணித்தியாலம் பிரத்தியேக ஆங்கில ஆசிரியரால் ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

## XIV) ஏனைய வசதிகள்

பயிலுநர்களுக்கு குடிநீர், மலசலகூடம், ஆடை மாற்றுதலுக் கான இடம், உணவு அருந்துதல் / தேநீர் தயாரித்தலுக்கான இடம் போன்ற வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

## XV) மொடியூல்ரீதியான மதிப்பீடும், NVQ மதிப்பீடும்

ஒவ்வொரு மொடியூலும் கற்பித்ததன் பின் மொடியூல் ரீதியான மதிப்பீடுகள் நடைபெறும். மொடியூல்கள் கற்பித்து முடிந்த பின்னர் NVQ சான்றிதழுக்கான மதிப்பீடுகள் மதிப்பீட்டாளர் களால் நடாத்தப்பட்டு பெறுபேற்று அறிக்கைகள் TVECக்கு அனுப்பப்படும். தேர்ச்சியடைந்த பயிலுநர்களுக்கு சான்றிதழ் TVECஆல் நிறுவனத்துக்கு அனுப்பப்டும். அவை நிறுவனத் தால் பயிலுநர்களுக்கு வழங்கப்படும்.

# 05. துறை ரீதியான பயிற்சிகளும் அவற்றின் முக்கியத்துவங்களும்

## 1) மரவேலை - 4 பயிற்சிகள்

மரவேலையானது சமூகத்தில் அதிகளவு கேள்வியுள்ள தொழில்வாய்ப்பு மிக்க ஒரு துறையாக உள்ளது. போருக்குப் பின்னரான புனர்வாழ்வு அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் இத்துறை அதிகளவு பங்குசெலுத்துவதாக அமைகின்றது. மேலும் இத்துறை யில் நாளாந்தம் சாதாரணமாக 800/= முதல் 1000/= வரையில் உழைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இந்த வகையில் பிரதேசத்தின் தேவையையும், வாய்ப்பையும் கருத்தில் கொண்டு முதன்முதலாக 2007ம் ஆண்டு இப்பயிற்சி நெறியானது ஆரம்பிக்கப்பட்டது.

முற்றிலும் இயந்திர மயப்படுத்தப்பட்ட இப்பயிற்சிநெறியினை ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும் பயிலக் கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. நிறுவனத்தால் நடாத்தப்பட்ட மரவேலைப்பயிற்சி நெறிகளின் விபரங்கள் வருமாறு:

| இல | ஆரம்பம் | முடிவு | பயிலுநர் | | மொத்தம் | இடை விலகல் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | | |
| 01 | 2007 Feb | 2007 July | 06 | 19 | 25 | 03 |
| 02 | 2007 Sep | 2008 Mar | 12 | 13 | 25 | 02 |
| 03 | 2008 Apr | 2008 Nov | 17 | 08 | 25 | - |
| 04 | 2009 Mar | 2009 Oct | 15 | - | 15 | 03 |

## II) வீட்டு மின்இணைப்பு - 2 பயிற்சிகள்

புனர்வாழ்வு, அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடுகள், கட்டடங்கள் போன்றவற்றிற்கு மின் இணைப்பு வேலைகள் செய்யவேண்டிய தேவை உள்ளதோடு காலத் துக்குக் காலம் செய்யப்பட்ட வேலைகளில் திருத்த வேலைகளும், செய்யவேண்டி உள்ளதனால் இத்துறையும் வேலைவாய்ப்புள்ள, முக்கியத்துவம் வாய்ந்த துறையாக உள்ளது.

இத்துறையில் பெரும்பாலும் பொருத்த அடிப்படையிலான சம்பளமே பெறப்படுகின்றது. 1 Point க்கு 300/= என்ற அடிப்படை தற்போதுள்ளது.

மேற்படி வாய்ப்பையும் தேவைப்பாட்டையும் கருத்திற்கொண்டு நிறுவனத்தால் இப்பயிற்சிநெறி நடாத்தப்பட்டது. விபரங்கள் வருமாறு

| இல | ஆரம்பம் | முடிவு | பயிலுநர் | | மொத்தம் | இடை விலகல் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | | |
| 01 | 2007 Apr | 2007 Nov | 14 | 11 | 25 | 02 |
| 02 | 2007 Aug | 2008 Mar | 19 | 06 | 25 | - |

## III) கணனி வன்பொருள் திருத்துதல் - 4 பயிற்சிகள்

நவீன கணனி யுகத்தில் மக்கள் மத்தியில் கணனியின் பாவனை அதிகரித்துள்ளது. அலுவலகங்கள் அனைத்தும் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளதோடு வீடுகள் தோறும் கணனிப்பாவனையும் பாடசாலைகளில் மாணவர் கற்றலுக்காக அதிகளவான கணனிகளும் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த வகையில் பயன்படுத்தப்படும் கணனிகள் பராமரிப்பு, திருத்த வேலைகளை மேற்கொள்வதோடு, கணனிகள் Upgrade பண்ணவேண்டி உள்ளது. இதனால் கணனி வன்பொருள் திருத்துதல் முக்கியம் வாய்ந்த, அத்தியாவசியமான துறையாக விளங்குகின்றது.

இத்தேவைப்பாட்டையும், வாய்ப்பையும் கருத்தில் கொண்டே கணனி வன்பொருள் திருத்துதல் பயிற்சிநெறியானது நிறுவனத்தால் நடாத்தப் பட்டது. விபரங்கள் வருமாறு :

| இல | ஆரம்பம் | முடிவு | பயிலுநர் | | மொத்தம் | இடை விலகல் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | | |
| 01 | 2007 May | 2008 Mar | 11 | 14 | 25 | 11 |
| 02 | 2008 Apr | 2008 Nov | 17 | 06 | 23 | 06 |
| 03 | 2009 Apr | 2009 Oct | 13 | 02 | 15 | 04 |
| 04 | 2010 Apr | 2010 Oct | 05 | 10 | 15 | 01 |

## IV) மேசன் - 1 பயிற்சி

மேசன் தொழிலானது சமூகத்தில் அதிகளவு தொழில் வாய்ப்புமிக்க ஒரு துறையாக உள்ளது. போருக்குப் பின்னரான புனர்வாழ்வு அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் இத்துறை அதிகளவு பங்கு செலுத்துவதாக அமைகின்றது. இத்துறையில் நாளாந்தம் சாதாரணமாக 800/= முதல் 1000/= வரையில் உழைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.

இந்த வகையில் பிரதேசத்தின் தேவையையும் வாய்ப்பையும் கருத்திற்கொண்டு இப்பயிற்சி நெறியானது ஆரம்பிக்கப்பட்டது.

நிறுவனத்தால் நடாத்தப்பட்ட மேசன் பயிற்சிநெறியின் விபரம் வருமாறு :

| இல | ஆரம்பம் | முடிவு | பயிலுநர் | | மொத்தம் | இடை விலகல் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | | |
| 01 | 2007 Sep | 2008 Apr | 15 | 10 | 25 | 03 |

### V) அலுமினியம் பொருத்துதல் - 1 பயிற்சி

தற்காலத்தில் அலுமினியம் பொருத்தல் துறையானது பிரபல்யமடைந்து வருகின்றது. நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களில் Partition Work, வியாபார நிலையங்களின் அலுமாரி, இறாக்கைகள், AC பொருத்துமிடங்களில் Air Tight வேலைப்பாடுகள், யன்னல்கள், கதவுகள் போன்றன அலுமினியம், கண்ணாடி பொருத்துதல் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் இத்துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து கூடுதலான பணத்தை உழைப்பதற்கான சூழ்நிலை உருவானதால் இப்பயிற்சியானது நடாத்தப்பட்டது. வெளிமாவட்ட தொழிலாளர்கள் இங்கு அதிகமாக வேலை செய்கின்றனர்.

நிறுவனத்தால் நடாத்தப்பட்ட அலுமினியம் பொருத்துதல் பயிற்சிநெறியின் விபரம் வருமாறு :

| இல | ஆரம்பம் | முடிவு | பயிலுநர் | | மொத்தம் | இடை விலகல் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | | |
| 01 | 2008 Mar | 2008 Oct | 22 | 03 | 25 | - |

### VI) ரிவி றேடியோ திருத்துதல் - 1 பயிற்சி

இத்துறையில் திறமை வாய்ந்த தொழிலாளர்கள் அரிதாகி வருவதனாலும், வீடுகள் தோறும் ரிவி, றேடியோ சார்ந்த சாதனங் களின் பாவனை அதிகரித்து உள்ளமையினாலும் இத்துறை சார் வல்லுநர்களை உருவாக்கவேண்டிய தேவை உள்ளது. எனினும் அடிப்படை விஞ்ஞான அறிவு (Basic Scientific Knowledge) உடைய வர்களே இத்துறைக்குப் பொருத்தமானவர்கள்.

நிறுவனத்தால் நடாத்தப்பட்ட ரிவி றேடியோ திருத்துதல் பயிற்சி நெறியின் விபரம் வருமாறு :

| இல | ஆரம்பம் | முடிவு | பயிலுநர் | | மொத்தம் | இடை விலகல் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | | |
| 01 | 2008 Mar | 2008 Oct | 21 | 04 | 25 | 06 |

## VII) வீட்டு மின் உபகரணங்கள் திருத்துதல் - 1பயிற்சி

இத்துறையிலும் திறமை வாய்ந்த தொழிலாளர்கள் மிக குறைவாக உள்ளதனாலும், மின் உபகரணங்களின் பாவனை அதிகரித்து உள்ளமையினாலும் இத்துறைசார் வல்லுநர்களை உரு வாக்கவேண்டிய தேவை உள்ளது. எனினும் அடிப்படை விஞ்ஞான அறிவு (Basic Scientific Knowledge) உடையவர்களே இத்துறைக்கு பொருத்தமானவர்கள்.

நிறுவனத்தால் நடாத்தப்பட்ட வீட்டு மின் உபகரணங்கள் திருத்துதல் பயிற்சிநெறியின் விபரம் வருமாறு :

| இல | ஆரம்பம் | முடிவு | பயிலுநர் | | மொத்தம் | இடை விலகல் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | | |
| 01 | 2008 May | 2008 Dec | 16 | 09 | 25 | 03 |

## VIII) ரிங்கறிங் பெயின்ரிங் - 1 பயிற்சி ( தகர வேலையும் வர்ணம் பூசுதலும் )

வாகனங்களுக்கான ரிங்கறிங் பெயின்ரிங் செய்யும் தொழி லாளர்கள் அரிதாகிச் செல்லும் நிலை காணப்படும் அதேவேளை வாகனங்களின் பாவனை அதிகரித்து செல்வதனால் இத்துறைக்கு அதிகளவான கேள்வியும், தொழில் வாய்ப்பும் உள்ளது. இந் நிலைமையை கருத்திற்கொண்டு இப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. மேலும் இப்பயிற்சியை மாவட்டமட்டத்தில் நடாத்தப்படுவதும் அரி தாகவே உள்ளது.

நிறுவனத்தால் நடாத்தப்பட்ட ரிங்கரிங் பெயின்ரிங் பயிற்சி நெறியின் விபரம் வருமாறு:

| இல | ஆரம்பம் | முடிவு | பயிலுநா | | மொத்தம் | இடை விலகல் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | | |
| 01 | 2008 May | 2008 Dec | 25 | - | 25 | 04 |

# 06. தொழிற்பயிற்சி பற்றிய விழிப்புணர்வூட்டலும் அணிதிரட்டலும்

வடமராட்சிப் பிரதேசத்தில் கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 70 கிராமசேவையாளர் பிரிவுகளில் 50 கிராமசேவையாளர் பிரிவுகளில் எமது தொழிற்பயிற்சி அணி திரட்டாளர்கள் (VTM) மூலம் மேற்படி நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டது.

VTM கிராமமட்டத்திலுள்ள கிராமமட்ட அமைப்பு பிரதிநிதி களையும், கிராமசேவையாளர், சமுர்த்தி அலுவலர்களையும் அணுகி அவர்கள் மூலம் கிராமத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுடனான கலந்துரையாடல் ஒழுங்குசெய்து நடாத்தப்பட்டது.

மேற்படி கலந்துரையாடல்களில் கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்கள் விளக்கப்பட்டு அவர்களின் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்று இளைஞர், யுவதிகள் தமக்குப் பொருத்தமான பயிற்சி நெறிகளை முன்னுரிமை அடிப்படையில் இனங்கண்டு பயிற்சியில் இணைவதற்கு பதிவுகளை மேற்கொண்டனர்.

## கலந்துரையாடப்பட்ட விடயங்கள்

- அரச வேலைவாய்ப்பு - உத்தியோக மோகம்
- மாவட்டத்தில் வேலையற்றிருப்போர் கீழ் உழைப்பு நிலை
- ஒவ்வொருவருக்கும் அரச தொழில் கிடைப்பதற்கான வாய்ப்பு கடும் போட்டி
- சுய தொழிலின் அவசியம்
- தங்கியிருத்தல்
- தொழிற்பயிற்சியின் நன்மைகள் / அவசியம்
- தொழிற்பயிற்சியின் ஊடாக தொழிலுக்கான வாய்ப்புக்கள்

# 07. தொழிற்பயிற்சி துறையில் இனங்காணப் பட்ட பொதுப் பிரச்சனைகள்

**i)** குறைந்த கால பயிற்சிநெறிகள்
தொழிற் பயிற்சியை வழங்கும் சில அமைப்புக்கள் ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் என குறைந்த காலப் பயிற்சி நெறிகளை நடாத்துவதால் பயிற்சியின் தரம் கேள்விக்குறியாக உள்ளது. அதனால் பொதுமக்கள் தரமான பயிற்சியை இனங் காண்பதில் குழப்பம் உள்ளது.

**ii)** பொதுவான பாடத்திட்டம்
TVEC அங்கீகாரம் பெற்ற பாடத்திட்டத்தினை தொழிற்பயிற்சி வழங்கும் அமைப்புக்கள் பயன்படுத்தாத நிலை உள்ளது.

**iii)** பயிற்சி நடாத்தப்படாமலே சான்றிதழும் ஊக்குவிப்பும் வழங்குதல்
சில அமைப்புக்கள் கிராம மட்டத்தில் சில இளைஞர்களைத் தெரிவுசெய்து எந்தவொரு பயிற்சியையும் வழங்காமல் சான்றிதழ் வழங்கும் நிலை உள்ளது.

**iv)** செய்முறை மிகக் குறைவு - பாடசாலைக் கல்விப்பாணி
தொழிற் பயிற்சியை வழங்கும் சில அமைப்புக்களால் மிகக் குறைவான செய்முறையுடன் கருத்தியலை வழங்கி பயிற்சி நடாத்தப்படுகின்றது. இதனால் குறிப்பிட்ட பயிலுநர் தொழில் ரீதியான செய்முறை அறிவை பெற முடியாது போகின்றது.

**v)** சிலதுறைகளில் பிரதேசதேவைக்கு அதிகமான பயிற்சிகள்
பிரதேச தேவைப்பாட்டுக்கு அதிகமான பயிற்சிகளை வழங்கு வதால் சில துறைகளில் வேலையில்லாப் பிரச்சினை ஏற்படு கின்றது. உ-ம் : வீட்டு மின்இணைப்பு

**vi)** சான்றிதழ் பெறுவதும் வழங்குவதுமே பயிற்சியின் நோக்கம்
பயிற்சிக்கு வரும் சில பயிலுநர்கள் சான்றிதழ் பெறுவதையும் பயிற்சி வழங்கும் சில அமைப்புக்கள் சான்றிதழ் வழங்குவதை யும் நோக்காக கொண்டுள்ளன.

vii) ஒரு பயிலுநர் பலஇடங்களில் புல பயிற்சிகளைப் பெறுதல்

பயிலுநர்களில் சிலர் எங்கெல்லாம் பயிற்சி வழங்கப்படு கின்றதோ அங்கு சென்று பல பயிற்சிகளைப் பெறுவதை நோக்காகக் கொண்டுள்ளனர்.

viii) வேலையில்லாப் பிரச்சனை

வேலையில்லாப் பிரச்சனைக்குத் தீர்வாகவே தொழிற்பயிற்சிகள் முன்வைக்கப்பட்ட போதும் நடைமுறையில் அது முற்றாகத் தீர்ந்தபாடில்லை. பயிலுநரின் மனப்பாங்கே முக்கிய காரணி ஆகும்.

## பயிலுநர்கள்

i) ஆர்வம் இன்மை

சில வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகள் தாம் தொழிற் பயிற்சிகளைக் கற்று தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மிகக் குறைவாகவும், ஆர்வம் இல்லா மலும் இருக்கிறார்கள் ஆர்வமூட்ட நடவடிக்கை அவசியம்.

ii) வரவு ஒழுங்கீனம்

தொழிற்பயிற்சியைப் பயில வருபவர்கள் சிலர் பயிற்சிநெறிக்கு ஒழுங்கீனமாகவே சமூகமளிக்கிறார்கள். இதற்கு ஜீவனோபாயமும் உழைப்புப் பிரச்சினையும் அடிப்படையாக உள்ளது. எமது பயிற்சிநெறியில் பிரச்சினை உடையவர்கள் இனங்காணப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

iii) இடைவிலகல்

தொழிற் பயிற்சியைப் பயில வரும் பயிலுநர்களில் சிலர் ஆரம்பகாலங்களிலும், இடைப்பட்ட காலங்களிலும் பயிற்சி யிலிருந்து இடைவிலகுகிறார்கள்.

iv) தொழில் விருப்பம் மிகக் குறைவு

தொழிற் பயிற்சியைப் பயின்றவர்களில் சிலர் தாம் தொழில் செய்து முன்னேற வேண்டும் என்ற விருப்பம் குறைவாகவே காணப்படுகின்றார்கள்.

v) திறமைசாலியாக வரவேண்டும் என்ற வைராக்கியம் இல்லாமை

தாம் கற்கும் துறையில் தான் திறமைசாலியாக வரவேண்டும் என்ற வைராக்கியம் இல்லாமல் சிலர்இருக்கிறார்கள்.

## போதனாசிரியர்

i) அர்ப்பணிப்பு, கடமையுணர்வு

தொழிற் பயிற்சியைப் பயிற்றுவிக்கும் போதனாசிரியர்களில் சிலர் எவ்வளவு அர்ப்பணிப்புடனும், கடமையுணர்வுடனும் தொழிற்படுகிறார்கள் என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

ii) தகைமையின்மை

துறை ரீதியான சான்றிதழ்களை மட்டும் சிலர் வைத்திருக் கிறார்களே தவிர அனுபவ ரீதியான அறிவையும், செயற் திறனையும் மிகக் குறைந்தளவே கொண்டுள்ளனர்.

iii) **NVQ, CBT** தேர்ச்சியின்மை

தேசிய தொழிற் தகைமையையுடைய அங்கீகரிக்கப்பட்ட CBT பாடவிதானத்தைக் கற்பிக்கும் தேர்ச்சி இல்லாதவர்களாகவே சில போதனாசிரியர்கள் காணப்படுகின்றார்கள். எமது பயிற்சியில் போதனாசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

iv) மெல்லக் கற்போர், திறன் குறைந்தோரைக் கற்பிக்கும் ஆற்றல்

பாடசாலையிலிருந்து இடை விலகியவர்களே கூடுதலாக தொழிற்பயிற்சிக்கு வருகின்றார்கள். இவர்களில் மெல்லக் கற்போரும், திறன் குறைந்தோரும் அதிகமாகக் காணப்படு கின்றார்கள். இவர்களுக்கு ஏற்ற முறையில் தொழிற்கல்வியைக் கற்பிக்கும் ஆற்றல் போதனாசிரியர்களுக்குக் குறைவு.

## தொழில் வாய்ப்பு

i) பயிற்றப்பட்டவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுவது இல்லை.
தொழிற்பயிற்சியைப் பயின்றவர்களுக்கு தொழில் வழங்குனர்கள் அரச வேலைத் திட்டங்களில் வாய்ப்புக்கள் வழங்கப்படுவது மிக அரிது.

ii) வெளி ஒப்பந்ததாரர், தொழிலாளர் வருகை
புதிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளத் தென்பகுதியில் இருந்து ஒப்பந்ததாரர்கள், தொழிலாளர்கள் எமது பகுதிக்கு வருகை தருவதால் இங்குள்ளவர்கள் வாய்ப்புக்களை இழக் கிறார்கள்.

iii) கூறுவிலை - அரச நிறுவனங்களில் உள்ள சிக்கல்கள்
அரச நிறுவனங்கள் ஊடாக நடைபெறும் வேலைத்திட்டங்களில் கூறுவிலைகள் வழங்கி வேலைத்திட்டங்களைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் உள்ளன.

iv) போட்டி உற்பத்திப் பொருட்கள் தென்பகுதியிலிருந்து வருகை உ-ம் : தளபாடம்
தரங் குறைந்த மூலப்பொருட்களில் செய்யப்பட்ட (இறப்பர் மரம்) ஆயுள் குறைந்த பொருட்களாக இருந்தும் விலை, கவர்ச்சியின் காரணமாக நுகர்வோர் நாட்டம் கொள்கின்றனர்.

v) வெளிக்களப்பயிற்சி **(OJT)**
நடைபெற்று வரும் நிர்மாண வேலைத்திட்டங்களில் பயிலுநர்கள் வெளிக் களப்பயிற்சியை பெற முடியாத நிலை உள்ளது.

## NVQ முறையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள்

i) அதிகளவான அழிபொருட்கள்
ஒரு பயிலுநர் தேர்ச்சி அடையும் வரை செய்முறையை செய்ய வேண்டியுள்ளதால் கூடுதலான அழிபொருட்கள் தேவைப்படுகின்றது.

ii) கூடுதலான காலம்
தேர்ச்சி அடையும் வரை பயிற்சி பெறவேண்டியுள்ளதால் கூடுதலான காலம் எடுக்க நேரிடுகின்றது.

iii) **CBT, NVQ** தொடர்பான அறிவு குறைவு, விழிப்புணர்வு குறைவு
CBT, NVQ முறையில் பயின்ற, பயிற்றப்பட்ட போதனாசிரியர்கள் எல்லாத் துறைகளிலும் இல்லை. மேலும் CBT, NVQ தொடர்பான விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது.

iv) மதிப்பீட்டாளர் **(Assessor)** இல்லை
ஒரு சில துறைகள் தவிர்ந்த ஏனைய துறைகளுக்கு NVQ மதிப்பீடுகளை நடாத்தக்கூடிய மதிப்பீட்டாளர்கள் இல்லை.

## 08. மெல்லக் கற்போருக்கான பரிகாரம்

தொழிற்பயிற்சி நெறியினைப் பயில்வதற்கு பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகிய வேறுபட்ட தராதரங்களை உடையவர்களே இணைகிறார்கள். இவர்கள் தமக்கு விருப்பமான வாய்ப்பு உடைய பயிற்சிகளில் பங்குகொள்கின்றனர். எனினும் குறிப்பிட்ட பயிற்சிநெறியிலுள்ள பயிலுநர்களை 4 வகையாகப் பிரிக்கலாம்.

1) A பிரிவு - ஒருதடவையில் செயற்பாடுகளை செய்து முடிப்பர்.
2) B பிரிவு - 2ம் தடவையில் செயற்பாடுகளை செய்து முடிப்பர்.
3) C பிரிவு - 3-4 தடவையில் செயற்பாடுகளை செய்து முடிப்பர்.
4) D பிரிவு - மீண்டும் மீண்டும் பல தடவைகளில் செயற்பாடுகளை செய்து முடிப்பர்.

இவர்கள் வேலைக்கூடத்தில் செயற்பாடுகளின் ஊடே இனங்காணப்படுவர்.

இவர்களில் A பிரிவினர் மிகத் திறமையானவர்கள். ஒரு தடவையில் தேர்ச்சி நிலையை அடைவர். கற்பித்தலில் இவர்களை தட்டிக் கொடுப்பதன் ஊடாக மேல்நிலைக்குச் செல்வர்.

B பிரிவினர், போதனாசிரியர் தவறுகளை சுட்டிக்காட்டி நேர்த்தியான வழிகாட்டலின் மூலம் சிறு தாமதத்துடன் தேர்ச்சி நிலையை அடைவர்.

C, D பிரிவினர் தேர்ச்சி நிலையை அடைவதில் சவால் மிக்கவர்கள். அதாவது திறன்குறைந்த,செயற்பாடுகளை நேர்த்தியாக செய்வதில் சிக்கலுடையவர்கள். இவர்களை மெல்லக் கற்போர் எனலாம். இவர்களுக்கே விசேட கவனம் செலுத்தவேண்டிய பரிகார கற்பித்தலினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பரிகார கற்பித்தலுக்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்

i) இனங்காணப்பட்ட இப்பிரிவினரை தனிக்குழுக்களாக்கப்படல் வேண்டும்.
ii) போதனாசிரியர் எந்த வேளையிலும் இவர்களில் ஓர் உன்னிப்பான கண்ணோட்டம் வைத்திருத்தல் வேண்டும்.
iii) ஒவ்வொரு தனிப்பட்ட பயிலுநரும் குறிப்பாக எந்த விடயத்தில் தடங்கல் நிலையில் உள்ளார் என்பது இனங்காண வேண்டும்.
iv) மிகத் திறமையான A பிரிவினரை இவர்களுக்குப் பொறுப்பாக நியமித்து போதனாசிரியரின் வழிகாட்டலில் செயற்பாடுகளை தூண்ட வேண்டும்.
v) திரும்பத்திரும்ப செய்முறைகளை செய்வதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்படல் வேண்டும். ( நேர்த்தியான கண்காணிப்புடன்)
vi) நாளாந்தம் பயிற்சி முடிவடைந்த பின்பும் இவர்களுக்கு மட்டும் மேலதிக வழிகாட்டல்களும், பயிற்சிகளும் மெதுவான வேகத்தில் படிமுறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
vii) வீட்டு வேலைகள் சில வழங்கப்பட்டு மறுநாள் அல்லது ஒரு சில நாட்களின் பின்னர் அவற்றை பரிசீலிக்க வேண்டும்.
viii) ஆதரவாக அணுகி தங்களை முன்னேற்றுவதில் மற்றவர்கள் அக்கறையாக உள்ளார்கள் என்ற மனநிலையை உருவாக்குவதோடு மற்றவர்களைப் போல தாங்களும் வரவேண்டும் என்ற ஆசையை ஊட்டி வளர்க்க வேண்டும்.
ix) கண்டிப்பான வழிநடாத்தல் அவசியம்.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை ஒழுங்காக மேற்கொள்வதன் மூலம் மெல்லக் கற்கும் பயிலுநர்களையும் தேர்ச்சி உடையவர்களாக மாற்ற முடியும். இதற்கு ஒழுங்கான வரவும் ஒத்துழைப்புத் தன்மையும் அவசியமாகும்.

## 09. தொழிற்பயிற்சித் துறையில் நிறுவன சாதனைகள்

i) நான்கு வருட காலத்தில் (2007 - 2010) 15 பயிற்சிநெறிகளை வெற்றிகரமாக நடாத்தியமை

| | |
|---|---|
| மொத்த பயிலுநர்கள் | 300 |
| ஆண் பயிலுநர்கள் | 204 |
| பெண் பயிலுநர்கள் | 96 |

ii) வடமராட்சியில் தரமான தொழிற்பயிற்சி வழங்கலில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்தமை

iii) எட்டு துறைசார் பயிற்சிகளை வழங்குவதற்கான சகல வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளமை

iv) பயிற்சிநெறியில் பயின்ற மேசன்,தச்சு, வீட்டு மின்னிணைப்பு, அலுமினியம் பொருத்துதல், ரிங்கரிங் பெயின்ரிங் பயிலுநர்கள் மூலம் இரு பயிற்சிநிலையக் கட்டடங்களைக் கட்டி முடித்தமை. (நிரந்தர பயிற்சி நிலையம், தற்காலிக பயிற்சி நிலையம் - 1000 + 1000 சதுர அடி)

v) துறை ரீதியான போதனாசிரியர்களை உருவாக்கியமை

vi) TVEC ல் பதிவு செய்யப்பட்டமை

vii) யாழ் மாவட்டத்தில் முதலாவதாக கணனி வன்பொருள் பயிற்சி நெறி Accreditation பெறப்பட்டமை L3

viii) எமது நிறுவனத்திலேயே கணனி வன்பொருள், மரவேலை NVQ பரீட்சை நடாத்தி பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து பயிலுநர்களும் சித்தியடைந்தமை.

ix) மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட RPL பரீட்சைக்குத் தோற்றிய பயிலுநர்கள் அனைவரும் சித்தியடைந்தமை.

x) Quality Management System (QMS) - இதற்கான சகல வளங்களையும் கொண்டுள்ளமை.

## 10.வெளிக்களப்பயிற்சி

ஒவ்வொரு பயிற்சியிலும் 7 மாத கால வகுப்பறைப் பயிற்சியை முடித்த தேர்ச்சியுள்ள பயிலுநர்களுக்கு 3 மாத காலம் வெளிக்களப் பயிற்சி வழங்கப்படும். வகுப்பறையில் கருத்தியல், செய்முறை ஆகிய இரண்டையும் பயின்ற பயிலுநர்கள் வெளிக்களப் பயிற்சிக் காக வேலைத் தலங்களுக்குச் சென்று அங்கு கற்றவற்றை பிரயோக ரீதியில் பயன்படுத்துவதோடு மேலதிக பயிற்சிகளையும் பெற்றுக் கொள்கின்றார்கள்.

இதனூடாக பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து அதற்குத் தீர்வும் காணுகின்றார்கள். மேலும் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளல் தொழிலைக் கொண்டு நடாத்தல், தொழிலில் உள்ள சில நுணுக்கங்கள் போன்றவற்றை வெளிக்களப் பயிற்சியின் மூலம் பெற்றுக் கொள்கின்றார்கள்.

எனினும் சில பயிலுநர்கள் பயிற்சிநெறிக்கு காட்டிய ஒழுங்கு களை வெளிக்களப் பயிற்சியில் காட்டத் தவறுகிறார்கள். வெளிக் களப் பயிற்சியில் ஒழுங்கு தவறும் பயிலுநர்கள் தொழிலில் முன்னிலை வகிப்பது சிரமமானதாகவே அமையும்.

மேலும் மாவட்டத்தில் வெளிக்களப் பயிற்சிக்கு சில துறை களுக்கு வாய்ப்புக்கள் இல்லை / மிகக்குறைவு என கூறலாம்.

### கணனி வன்பொருள் திருத்துதல் பயிற்சி பயிலுநர்களுக்கான OJT வழங்குனர்கள்

1) வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகள்
 - யா/ ஹாட்லிக் கல்லூரி
 - யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
 - யா/ வடஇந்து மகளிர் கல்லூரி
 - யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
 - யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
 - யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

யா/ விக்னேஸ்வராக் கல்லூரி
யா/ கரணவாய் மகா வித்தியாலயம்
யா/ பொன்னம்பல வித்தியாலயம்
யா/ திரு இருதயக் கல்லூரி
யா/ ஞானாசாரியார் கல்லூரி

ஏனைய பயிற்சி நெறிகளுக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த தாரர்கள், உற்பத்தி நிலையங்கள், வேலைக் கூடங்கள் ஊடாக வெளிக்களப்பயிற்சி வழங்கப்பட்டது.

## 11. பயிற்சி முடித்த பயிலுநர்களின் தொழில் வாய்ப்பு

பயிற்சியை நிறைவு செய்த பயிலுநர்களின் தொழில்வாய்ப்பு பற்றி நோக்கின் அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**i) தொழிலுக்காக வெளிநாடு சென்றவர்கள் :**

தாம் பயின்ற தொழிற் பயிற்சியின் அடிப்படையில் டோகா, கட்டார் போன்ற நாடுகளில் உறவினர், நண்பர்கள் மூலம் அல்லது முகவர்கள் மூலம் Work Visa பெற்று அங்கு சென்று தொழில் செய்கிறார்கள். இவர்கள் கணிசமான அளவினரே ஆவார்.

**ii) தாமாகவே தொழில் தொடங்கியவர்கள் (சுயதொழில்)**

இவர்கள் தனித்து வேலைசெய்யும் மனஉறுதியும் தன்னம்பிக்கையும் கொண்டவர்கள். தாமாகவே துறை ரீதியான தொழிலை ஆரம்பித்து தன் தொழிலுக்கு மேலும் தேவையான ஒரு சிலரையும் உள்வாங்கி திறம்பட தொழில் செய்கிறார்கள்.

**iii) பிறருடன் சேர்ந்து தொழில் செய்பவர்கள் :**

பயிற்சி முடித்தபின் துறை ரீதியான தொழில் செய்பவர்களுடன் சேர்ந்து தாமும் தொழில் செய்கிறார்கள். கணிசமான நாளாந்த, மாதாந்த வருமானத்தை ஈட்டக் கூடிய நிலையில் உள்ளனர்.

**iv) தொழில் வந்தால் மட்டும் செய்பவர்கள் :**

இவர்கள் தாமாகத் தொழில் தேடி செல்லமாட்டார்கள். தம்மை தேடி வந்தால் மட்டும் செல்வார்கள். இவர்கள் பலதிலும் ஈடுபாடு கொண்டவர்கள்.

v) தொழில் செய்யாதவர்கள் :

இவர்கள் பயிற்சியை பயின்று முடித்தும் தொழில் செய்வதில் ஆர்வம் குறைந்தவர்கள். இதனால் இவர்கள் பயின்றுவிட்டும் தொழில் அற்று இருப்பார்கள். இவ்வகையில் பெண்பயிலுநர்கள் கூடிய வீதத் தினராவர். இவர்கள் தொழில் செய்யாமைக்கு தொழில்வாய்ப்பு கிடைக்காமையும் ஒரு காரணம் எனலாம். கிடைக்கப்பெற்றும் பல காரணங்களை முன்வைத்து தொழிலை தட்டிக் கழிக்கின்றமையும் உண்டு. இவர்கள் குறைந்த வீதத்தினரே ஆவர்.

# 12. PRE,MID POST COURSES - முக்கியத்துவங்கள்

தொழில் பயிற்சியை பயிலும் பயிலுனர்கள் தமது தொழில் வாழ்க்கையை இலகுபடுத்தி முன்னெடுப்பதற்கு உந்துதலாகவும், வழிகாட்டியாகவும் அமைவதாக இப்பயிற்சிகள் வகுக்கப்பட்டுள்ளன. இவை தொழில் பயிற்சி வழங்கும் காலப்பகுதியின் ஆரம்பத்திலும் இடைநிலையிலும் இறுதியிலுமாக Pre, Mid, Post Courses என மூன்று கட்டங்களாக வழங்கப்படுகிறது. இப் பயிற்சிகள் இத்துறையில் பயிற்றப்பட்ட பிரத்தியேக வளவாளர்களால் வழங்கப்படுகிறது.

பொதுவாக இப்பயிற்சிகள் மூலம் பயிலுனர்களிடையே உள்ள ஒதுங்குதல் தன்மை நீங்கி தாமாக முன்வந்து செயற்படல், குழு வாகவும் தனித்தும் செயற்படல், இயலுமைகளை வெளிப்படுத்துதல், பரந்து பட்ட விடயங்களை அறிதல், புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு போன்ற பல பயன்களை அடைகின்றனர். மேலும் இப்பயிற்சி நடாத் தப்படும் ஒழுங்கு வருமாறு.

| பயிற்சியின் முன்னான நிகழ்வுகள் **(Pre Course)** | நாட்கள் |
|---|---|
| 1. தொழில் முனைவு பயிற்சி | 01 |
| 2. வேலைத்தள பாதுகாப்பு | 02 |
| 3. முதலுதவி | 02 |
| 4. போசாக்கும் உடல்நலமும் | 01 |
| 5. ஏச்.ஐ.வி எயிட்ஸ் | 01 |

| | |
|---|---|
| 6. பால்நிலை சமத்துவம் | 02 |
| 7. கைத்தொழில் பறிய அறிவு | 02 |
| 8. வாழ்க்கைத்திறன் | 02 |

இடைநிலைப் பயிற்சிகள் **Mid Course**

| | |
|---|---|
| 1. பால்நிலை சமத்துவம் | 02 |
| 2. வாழ்க்கைத்திறன் | 01 |
| 3. கைத்தொழில் பற்றிய அறிவு | 01 |

பயிற்சியின் பின்னரான நிகழ்வுகள் **Post Course**

| | |
|---|---|
| 1. தொழில் திறன் பயிற்சி | 02 |
| 2. தொழிலாளர் உரிமைகளும் சாசனங்களும் | 01 |
| 3. வாழ்க்கைத்திறன் | 01 |
| 4. கைத்தொழில் பற்றிய அறிவு | 02 |

## 01. தொழில் முனைவு பயிற்சி

பயிற்சியின் முன்னான நிகழ்வுகளில் முதலாவதாக நடாத்தப்படும் 01 நாள் பயிற்சி ஆகும். தொழில் தொடர்பான அறிவையும் அதில் ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்கான நிறைவான மனப்பாங்கையும் விருத்தி செய்வதோடு தொழில் பயிற்சியை பூர்த்தி செய்ததும் தமக்கென ஒரு சுயதொழில் முயற்சியை அல்லது தொழிலை ஏற்படுத்தி நிலையான வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கான அத்திவாரத்தை இப்பயிற்சி பயிலுநர்களுக்கு வழங்குகிறது.

## 02. வேலைத்தள பாதுகாப்பு

இப்பயிற்சியும் முன் நிகழ்வுகளில் நடாத்தப்படும் 2 நாள் பயிற்சி ஆகும். வேலைத்தள பாதுகாப்பு தொடர்பான அறிவை பயிலுநர் களுக்கு இப்பயிற்சி வழங்குகிறது. அதாவது வேலைத்தளத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள், விபத்துக்களை தவிர்த்தல், பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தல் போன்ற விடயங்களை பயிலுநர்களுக்கு வழங்குகிறது. தொழிற்பயிற்சியை பயிலும் அனைத்து பயிலுனர்களுக்கும் மிகவும் அவசியமான பயிற்சி ஆகும். இதனை தொழிற்பயிற்சியை பயிலுகின்ற வேளையில் பிர

யோகிக்க வேண்டிய அவசியம் உண்டு.

03. முதலுதவி

இப்பயிற்சியும் முன்நிகழ்வுகளில் நடாத்தப்படும் 2 நாள் பயிற்சி ஆகும். வேலைத்தளத்தில் பயிலுனர்களுக்கு திடீர்விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் திட்டமிட்டு செயற்பாடுகளை மேற்கொண்டு முதலுதவி அளிப்பதற்கான திறன்களை இப்பயிற்சியினூடாக பெற்றுக் கொள்வர். இது அவர்களுக்கு வாழ்நாள் முழுவதற்கும் பயனுடைய தொன்றாக அமையும்.

04. போசாக்கும் உடல்நலமும்

இப்பயிற்சியானது முன் நிகழ்வுகளில் 1 நாள் நடாத்தப்படும். பயிலுநர்கள் உடல்நலத்தை பேணுதல் போசாக்கின்மையிலிருந்து விடுபடுதல், உணவுப் பழக்கவழக்கங்கள், உடல் ஆரோக்கியம் போன்ற விடயங்களை அறிந்து கொள்வதனுடாக தமது போசாக்கான உடல்நலத்தை பேணி தமது தொழில் வாழ்க்கையை முன்னெடுக்க இது உதவும்.

05. ஏச். ஐ. வி எயிட்ஸ்

இப்பயிற்சியானது முன் நிகழ்வுகளில் 1 நாள் நடாத்தப்படும். பயிலுநர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் பற்றியும் ஒழுக்கச் சீர்கேடுகளினால் ஏற்படும் பால்வினை நோய்கள் பற்றியும் அறிவதோடு ஏச்.ஐ.வி எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வையும் பெற்றுக்கொள்வர்.

06. பால்நிலை சமத்துவம்

இப்பயிற்சியானது முன் நிகழ்வுகளில் 2 நாட்களும் இடைநிலை பயிற்சியின்போது 2நாட்களுமாக 4 நாட்கள் நடைபெறும். பயிலுநர்கள் பால்நிலை அடிப்படை எண்ணக்கரு பற்றிய விழிப்புணர்வை பெற்றுக் கொள்வதோடு தொழிலின்போது ஆண் பெண் வேறுபாடின்றி விட்டுக் கொடுப்போடும், புரிந்துணர்வோடும் பணியாற்றும் நிலைமையை உருவாக்கும். மேலும் இருசாராரும் கடினஉழைப்பின் மூலம் குடும்ப நிலைமையை முன்னேற்றுவதன் அவசியத்தையும் அறிந்து கொள்வர்.

07. கைத்தொழில் பற்றிய அறிவு

இப்பயிற்சியானது முன் நிகழ்வுகளில் 2 நாட்களும் இடைநிலைப் பயிற்சியில் 1நாளும் பயிற்சியின் பின்னரான நிகழ்வுகளில் 2

நாளுமாக மொத்தம் 5 நாட்கள் நடைபெறும். பயிலுனர்கள் தமது தொழிலைத் தெரிந்துகொள்ளல். தெரிவுசெய்யும் தொழிலை கொண்டு நடாத்துதல், முன்னேற்றுதல், தக்கவைத்தல் போன்ற தங்கள் தொழிலை செய்தல் தொடர்பான சகல நுணுக்கங்களையும் இப் பயிற்சியினுடாகக் கற்றுக் கொள்வர்.

### 08. வாழ்க்கைத்திறன்

இப்பயிற்சியானது முன் நிகழ்வுகளில் 2 நாட்களும் இடைநிலைப் பயிற்சியில் 1நாளும் பின்னரான நிகழ்வுகளில் 1 நாளுமாக மொத்தம் 4 நாட்கள் நடைபெறும். பயிலுனர்கள் தம் எதிர்கால தொழில் வாழ்க்கையை பயனுள்ளதாகக் கழிப்பதற்கு தேவைப்படும் வாழ்க் கைத் திறன்களைக் இப்பயிற்சியினுடாகக் கற்றுக் கொள்வர்.

## 13. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக் குழுவின் பதிவும் (TVEC REGISTRATION) பயிற்சிநெறி தரமுயர்த்தலும் (ACCREDITATION)

இலங்கை ஜனநாயகக் குடியரசின் 1995ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ம் திகதி வெளியான 857/8 இலக்க வர்த்தமாணி அறி வித்தலின் படி தொழிற்பயிற்சியை நடாத்தும் அமைப்புக்கள் மூன்றாம் நிலை தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்வது அவசிய மாகும். Tertiary And Vocational Education Commisson

இதற்கமைய ஊற்று நிறுவனமானது TVECல் 16/7/2008 ல் முதல் தடவையாக பதிவு செய்யப்பட்டது. பதிவு இல P25/0017

இப் பதிவு செய்தலானது பயிற்சியின் தர உத்தரவாதத்தைப் பெறுவதற்கான Accreditation முதல்படியாக அமையும்.

மேலும் Computer Hard Ware Technican பயிற்சியானது 04/10/ 2010 ல் தர உத்தரவாதத்தை பெற்றது. Course Accreditation. NVQ L3 - No - ac10410100636 இதன் மூலம் பயிலுனர்களுக்கு பயிற்சி நிலையத்திலேயே NVQ (L3) மதிப்பீடுகளை நடாத்தி NVQ சான்றிதழ் வழங்கப்படுகிறது.

பின் இணைப்பு :

# 14. (1) தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி (CBT) தேசிய தொழிற்தகைமை (NVQ)

அறிமுகம்

தகைமை (ஆற்றல்) அடிப்படையிலான பயிற்சி என்பது புதிய தொன்றல்ல. பாரம்பரிய பயிற்சி முறையிலிருந்து வேறுபட்ட வகையில் 30 வருடங்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்ததொரு பயிற்சி முறையாகும்.

தத்துவவியலாளர்களின் கூற்றுப்படி,

- ✡ தகைமை என்பது செயலாற்றுதலுக்கான திறமையாகும். பெறுபேறுகள் கிடைக்காவிடின் அறிவு, உளப்பாங்கு, மற்றும் முயற்சி என்பன பெறுமதியற்றதாகப் போய்விடும்.
- ✡ தரமான போதனையும் போதுமான நேரத்தினையும் மனிதனுக்கு வழங்கும்போது அவர்கள் எதையும் நன்றாகக் கற்கிறார்கள்.

## CBT இன் வரையறை

மூன்று சொற்களையும் தனியாக உற்று நோக்கும்போது நீங்கள் ஒருவரை தகைமை உடையவர் என்பதில் என்ன கருதுகின்றீர்கள் அவரால் ஏதோ ஒன்றைச் செய்யமுடியும் என்பதாகும். இது நிகழ்ச்சித் திட்டத்தின் உள்ளடக்கம் தொடர்பானது. அதனை நன்றாகச் செய்கின்றார் இது கற்போனின் மதிப்பீடு தொடர்பானது. தகைமை என்பது ஒருவர் உண்மையில் ஏதோ ஒன்றைச் செய்கின்றார் என்பதாகும். இது அவதானிக்கக்கூடியது.

இரண்டாவது சொல் அடிப்படை என்பது கட்டி எழுப்பப்பட்டது என்று பொருள். வேறு வகையில் கூறின் தகைமை அடிப்படை என்பது நிகழ்ச்சித்திட்டமானது கற்போர்கள் செய்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்குமென்பதாகும்.

மூன்றாவது சொல் பயிற்சி இது பின்வரும் அட்டவணை மூலம் கல்வி என்ற சொல்லுடன் விளக்கப்படுகின்றது.

| விடயம் | கல்வி | பயிற்சி |
|---|---|---|
| நோக்கம் | முழு வாழ்க்கைக்காக | நல் வாழ்க்கைக்காக |
| எங்கு பெறப்படும் | பல்கலைக்கழகம் | தொழில்நுட்ப பாடசாலை |
| ஒருமுகப்படுத்தப்பட்டது | அறிவு சார்பாக | திறன் சார்பாக |

## CBT இன் முக்கிய பண்புகள்

i) தகைமைகள் எல்லாம் கவனமாக இனங்காணப்பட்டு, நிரூபிக்கப் பட்டு தெரிவு செய்யப்படும்.

ii) பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் எல்லாம் இயல்பாகவே மொடியூலை கொண்டிருக்கும்.

iii) பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உட்சேர்வதும், வெளியேறுவதும் நெகிழ்ச்சித் தன்மை உடையதாக இருக்கும்.

iv) பங்கு கொள்வோரின் அறிவு, திறன் என்பன அவர்கள் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்சேரும்போது கணிப்பீடு செய்யப்பட்டு அறிவு திறன் வெற்றிகரமாக இருக்கும் பட்சத்தில் அவை விலக்களிக் கப்பட்டு அடுத்த மட்டத்திற்கு செல்லக்கூடியதாக இருக்கும்.

v) திறன் பயிற்சியின்போது உதவக்கூடிய கோட்பாடுகள் அதி கரிக்கப்படும். திறனை அடைவதற்கான முக்கியமான அறிவு கற்பிக்கப்படும்.

vi) பங்கு கொள்வோன் தேவையான அறிவு திறன் என்பவற்றில் தேர்ச்சியடைய தேவையான நிபந்தனைகளையும், வளங்களை யும் கொடுத்தல்.

vii) சுயமான கற்றல்

viii) வெற்றிகரமான பயிற்சி முடிவானது குறித்த தகைமையின்

அடைவின் அடிப்படையிலானது.

ix) கணிப்பீடானது வழமையைச் சார்ந்தது அல்ல. பிரமாணம் சார்ந்த பரீட்சையிலானது.

x) ஆற்றலின் அடைவு மாறாதது, ஆனால் நேரம் மாறக் கூடியது. தற்கால முறைமையானது நேரம் மாறாதது, வெளியீடு மாறக் கூடியது.

xi) மத்திய வாடிக்கையாளராக கைத்தொழில் நிலையங்கள் இடப் படுத்தப்பட்டுள்ளது.

## தேசிய தொழில் சார் தகமை முறைமை National Vocational Qualification (NVQ) System

பாடசாலைக்கல்வியின் பொருட்டு தேசிய ரீதியில் அங்கீகரிக்கப் பட்ட பாடத்திட்டத்திற்கமையக் கற்பித்து அதன் பிறகு பரீட்சைகள் நடாத்தி க.பொ.த. (சாதாரணதரம்) மற்றும் க.பொ.த. (உயர்தரம்) என்ற ரீதியில் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமங்களின்படி பல்கலைக்கழகங் களினால் வழங்கப்படும் B.A, B.SC போன்ற பட்டங்கள் ஒவ்வொரு மட்டத்திலும் தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்க, பயிற்சி நிறுவனங்களால் அளிக்கப்படும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி சான்றிதழ் டிப்ளோமாக்கள் இதற்குச் சமனான முறை யில் அங்கீகரிக்கப்படவில்லை. ஆகவே இளைஞர்கள் எந்தப் பாட நெறியினைத் தொடர்வது என்பது பற்றி தீர்மானிப்பதில் சிக்கல்கள் உள்ளன. அவ்வாறே தொழில் வழங்குனர் தொழில்களுக்கு ஆட் சேர்க்கும்போது மிகவும் பொருத்தமான வாழ்க்கைத் தொழில் பாட நெறி அல்லது டிப்ளோமா எது என்பதை தீர்மானிப்பதில் இதன் காரணமாக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு வானது அரச துறை சார்ந்த தொழிநுட்பக் கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிறுவகம், திறன்கள் அபிவிருத்தி திட்டத்துடன் இணைந்து வாழ்க்கைத் தொழில் தொழிநுட்பப் பயிற்சிஅமைச்சின் வழிகாட்டலுக்கு இணங்க தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமை முறைமை (National Vocational Qualification (NVQ) System) எனும் 7 மட்டங்களைக்கொண்ட தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமை

முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தும் பொருட்டு ஆரம்பப்படிகள், இது வரையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பல NVQ முறைக் கேற்ப வாழ்க்கைத் தொழில் திறன்களை வகைப்படுத்தி அம் முறையைப் பயன்படுத்தி வருகின்றன. க.பொ.த. (சாதாரணதரம்) மற்றும் க.பொ.த.(உயர்தரம்) போன்ற தகைமைகளுக்குரிய அறிவு, ஆற்றல் தொடர்பிலான சர்வதேச ரீதியாக தெரிந்து வைத்துள்ள விதத்திலேயே NVQ சான்றிதழ் மட்டங்களுக்கு ஏற்புடைய திறன்கள் பற்றி சர்வதேச ரீதியாக தெரிந்து வைத்துள்ளனர். ஆகவே தேசிய வாழ்க்கைத் தொழில்தகைமை முறையானது தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் ஏற்றுக் கொள்ளப்படும் வாழ்க்கைத் தொழில் சான்றிதழ் வழங்கப்படுகின்ற முறை ஒன்றாக இனங்காண முடியும்.

## தேசிய வாழ்க்கத் தொழில் தகைமை முறைமை (NVQ) குறிப்பிடும் மட்டங்கள் எவை?

ஒவ்வொரு வாழ்க்கைத் தொழிலுக்குப் பொருத்தமான பணியின் அளவு, அப்பணிகளை நிறைவேற்றும்போது ஏற்புடைய அறிவு மற்றும் அப்பணியை நிறைவேற்றும் ஆளில் நிலவும், அப்பணியிலுள்ள அளவு மற்றும் பண்புசார் பொறுப்புக்கள் போன்ற விடயங்கள் இத் தகைமைகளில் 7 மட்டங்களை இனங்காணும் பொருட்டு கவனத்தில் எடுக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1ம் மட்டம் | - | அடிப்படை, ஆரம்ப ஆற்றல்களுள்ள கைப் பணியாளர்கள் |
| 2ம் மட்டம் | - | அடிக்கடி மேற்பார்வையின் கீழ் செயலாற்றும் கைப்பணியாளர்கள் |
| 3ம் மட்டம் | - | சிறிய மட்டத்திலான மேற்பார்வையின் கீழ் செயலாற்றக்கூடிய கைப்பணியாளர்கள் |
| 4ம் மட்டம் | - | சுயாதீனமாக செயலாற்றக்கூடிய கைப் பணியாளர்கள் |
| 5ம் மட்டம் | - | மேற்பார்வையாளர்கள் |
| 6ம் மட்டம் | - | முகாமையாளர்கள் |
| 7ம் மட்டம் | - | திட்டமிடுபவர்கள் |

## தேசிய வாழ்க்கைத் தொழில் மட்டங்களை இனங் காண்பது எவ்வாறு?

அ) ஒவ்வொரு வாழ்க்கைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் திறனுள்ள கைப்பணியாளர், மேற்பார்வையாளர், உத்தியோகத்தர்கள், மற்றும் தொழில் வல்லுநர்கள் போன்றோரின் ஒத்துழைப்புடன் திறன்கள், நியமம் ( Skills Standard) தயாரிக்கப்படும். திறன்கள் நியமம் என்பது தொழில் ஒன்றுக்கு ஏற்புடைய திறன் கூறுகள் அதற்கு ஏற்புடைய இணைக்கூறுகள் அதன் நியமங்கள் செயற் பட வேண்டிய வேலைப் பரப்பு, இருக்கவேண்டிய அறிவு மற்றும் ஆற்றல்கள் என்பவற்றுக்கு வரைவிலக்கணம் கொடுக்கப்பட்ட ஆவணம் ஒன்றாகும்.

ஆ) கைத்தொழிலில் நிலவும் வேலை வாய்ப்புக்களுக்கு அமைய வாழ்க்கைத் தொழில்களுக்கு ஏற்புடைய திறமைக் கூறுகள் (Competency Units) சேர்க்கப்பட்டு தொழில் தகைமைகள் இனங் காணப்படும்.

## NVQ முறைமை தொழிற்படுவது எவ்வாறு?

அ) NVQ முறைமை மூன்றாம்நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவின் மேற்பார்வையின்கீழ் தொழிற்படும்.

ஆ) திறன்கள் நியமம் தயாரிக்கப்பட வேண்டிய வாழ்க்கைத் தொழில் களை மூன்றாம் நிலை, வாழ்க்கைத் தொழில்கல்வி ஆணைக்இ குழு மூலம் இனம்கண்டதன் பிற்பாடு அதுபற்றி அவ் ஆணைக் குழு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு அறிவிக்கும். அதன் பிறகு உரிய வாழ்க்கைத் தொழில்கள் பொருட்டான திறன் நியமப்படுத்தப்படும். உரியதரப்பினர், நிபுணர் தொழில் அமைப்புக்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு இவ் வரைவுகளைச் சமர்ப்பித்து அதுபற்றி அவர்களின் அபிப் பிராயங்களை பெற்றுக் கொண்டதன் பிற்பாடு தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையிலுள்ள தேசிய கைத் தொழில் பயிற்சி மதியுரைக் குழுவினால் அது செல்லுபடியான தாக ஆக்கப்படும்.

இவ்வாவணம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின் அது தேசிய திறன் நியமங்களாக வழக்கத்திற்கு கொண்டு வரப்படும்.

இ) இலங்கை தேசிய தொழிநுட்பக் கல்வி நிறுவகத்தினால் பயிற்று விக்கப்பட்டு சான்றுபடுத்திய பின்னர் தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டாளர்கள் மூலம் உரிய திறன்கள பற்றி மதிப்பிடப்படும்.

ஈ) மதிப்பீட்டின்படி திறன்கள் மட்டங்களைப் பெற்றுள்ள நபர்கள் பொருட்டு மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு வின் பணிப்பாளர் நாயகத்தினால் கையொப்பமிடப்பட்ட தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமைச் சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

உ) வாழ்க்கைத் தொழில், தொழிநுட்பபயிற்சி அமைச்சுக்குச் சொந்த மான நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி நிலையங்கள் (Career Guidance Centres) கற்கும் வள பயன்பாட்டு நிலையங்கள் (Learning Resource Utilization Centres) பரிசீலனை செய்யப்பட முடியும். அங்கு ஒவ்வொரு வாழ்க்கைத் தொழிலின் NVQ மட்டங்களுக்கு உரிய திறன்களை அறிய முடியும்.

## 14 (2)கற்றலுக்கும் வள பயன்பாட்டுக்குமான நிலையம்
## Learning Resource Utilization Centre (LRUC)

LRUC is an electronic library that contains both modern educational technology resources and standard Library Materials such as books learning modules,CDs,VCDs,Multimedia and IT equipments and other reference material. In addition, in support of the implementation of the competency Based Training (CBT) system of Vocational Tranning Centers the LRUC also maintains National skill standards and Curriculam materials.
The Computer and Library facilities are also available for poor A/L Students Free of Charge.

இந்தநிலையம் ஒரு மின்னியல் அறிவுகூடமாகும். அது நவீன கல்வி தொழில் நுட்ப வளங்களையும் வழமையான நூலக சாதனங்களான நூல்கள், கற்கும் கணுக்கள்,CDs,VCDs யும் இணையத்தள, மின்னஞ்சல் வசதிகள், உள்ளடக்கியதாகும். அத்தோடு தொழிற் பயிற்சி நிலையங்களில் திறமையான பயிற்சித் திட்டங்களை அமுல்செய்வதற்கு வசதியாக தேசிய நுட்ப நியமங்களையும், பாடவிதானங்களையும் கொண்டுள்ளது.
வறிய மாணவர்கட்கு கணணி, நூலக வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

### பிரதான நோக்கங்கள்

✠ சிறிலங்கா மற்றும் சில வெளிநாடுகளிலுள்ள தொழில்பயிற்சி அவற்றின் முறைமை தொடர்பான ஆவணங்களைக் கொண்டிருத்தல்.

✠ தேசிய, சர்வதேச முறைமை, தொழில்நுட்ப மாற்றங்கள் என்பவற்றை இணையத்தளம், மின்அஞ்சல் ஊடாக அறிவதற்கு வசதிகளை வழங்குதல்.

✠ சகல தொழிற்பயிற்சி நெறிகளுக்கும் திறமை அடிப்படையான பாடவிதானம், பயிற்சிக்குரிய தேசிய நுட்ப நியமங்கள் முதலியவற்றை உள்ளடக்கும் மூலமையம்.

✠ போதனாசிரியர்களுக்கும், பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கும் தொழில் பயிற்சி வழிகாட்டல், தொழில் பயிற்சியின் விசேட நுட்பம், வேலை தொடர்பான தகவல்களைப் பெறக்கூடிய நூல்களை உள்ளடக்கிய சிறு நூலகமாகத் தொழில்படுதல்.

✠திணைக்களங்களும், பயனாளிகளும் விபரங்கள்கோருமிடத்துமாவட்டத்தில் இடம்பெறும் தொழில் பயிற்சி தொடர்பான விபரங்களைக் கொடுத்தல்.

✠ பேணப்படும் ஆவணங்களைத் தற்போதைய நிலைக்கு சீர்செய்வதற்கு தொழில் அதிகார அமைப்புக்களுடன் இணைப்பைக் கொண்டிருத்தல்.

✠ பங்காளர், போதனாசிரியர், பயிலுனர்கள், பயிற்சி முடித்தவர்கள் பயன்படுத்தக்கூடிய வளங்களைக் கொண்டிருத்தல்.

## எதிர்பார்க்கும் பெறுபேறுகள் (பலாபலன்கள்)

✠ ஊற்று நிறுவனத்தின் ஒழுங்குகட்கும், விதிகட்கும் அமைவாக ஒவ்வொரு பங்காளி நிறுவனமும் வளங்களைப் பயன்படுத்துவதற்கு வசதிகள். (இணையத்தளம், கணனி பாடவிதானங்கள், வழிகாட்டி நூல்கள்)

✠ தொழில் அதிகார அமைப்புக்கள் (TVEC, VTA, NAITA) ஒருங்கிணைப்பை மேற்கொள்ள வசதிகள்

✠ பயிற்சியை நிறைவு செய்தவர்களும், போதனாசிரியர்களும் தொழில்பயிற்சி நுட்பம், வர்த்தகத்துறை, கணனி அறிவுமுதலியவற்றில் தங்கள் இயலுமையை விருத்தி செய்வதற்கு வசதிகள்.

✠ வேலைகொள்வோரும், சமூகமும் தேவைப்படும் தகவல்களைப் பெறும் வசதிகள்.

✠ பாடசாலை விலகிய மாணவர்கள் தொழில் பயிற்சி நெறிகள் தொடர்பான விபரங்களை அறிவதற்குரிய வசதிகள்.

## 14. (3) சாதாரண பயிற்சிக்கும், தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சிக்கும் (CBT) இடையிலான வேறுபாடு

| குறிகாட்டி | சாதாரண பயிற்சி | CBT |
|---|---|---|
| உள்ளடக்கம் | சுருக்கமானது | விரிவானது |
| கற்பித்தல் முறை | கருத்தியல், சிறிய பயிற்சி | செய்து காட்டல், முழுமையான பயிற்சி |
| போதனைப்பொருட்கள் | குறைந்தளவு | கூடியளவு |
| வளங்கள் | மேசை, கதிரை சிறிய செய்முறை வசதி | வேலைக்கூடம், பரிசோதனைக்கூடம் |
| நேரம் | நிலையானது | மாறக்கூடியது |
| போதனாசிரியர் | அறிவுடையவராக இருப்பர் | தகைமை ,ஆற்றல் உடையவராவர். |
| போதனாசிரியர் பின்னணி | மாணவனாக இருந்து | திறனுடைய பயிலுனர் |
| மதிப்பீட்டு நுட்பம் | வளமையான தொடர்பு | பிரமாணம் தொடர் பானது (தொழிற்சாலை நியமங்கள்) |
| மதிப்பீட்டுக்கருவி | எழுத்துப்பரீட்சை சிறிய செயலாற்றல் | முழுமையான செயலாற்றல் கணிப்பீடு |
| வெற்றிக்கான பிரமாணம் | தராதரப் பத்திரம் வழங்கப்படும். | தராதரப் பத்திரத்துடன் வேலைக்கு அமர்த்தும் வாய்ப்பு. |

- 021 4923528 -